**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2023 – ம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ம் நாள் வியாழக் கிழமை
2053 திருவள்ளுவராண்டு, சோபகிருது வருடம், ஐப்பசி திங்கள் 23 ம் நாள்

I.A.3/2023 in I.A.1/2022
IN
OS.No.57/2022

வடிவேல், ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/வாதி

//எதிராக//

1. துரைராஜ்,

2. வைத்தியநாதன். ... எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக கடந்த 27.07.2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அழகேசன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரெங்கசாமி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. அருண்ஜெயராமன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

உத்தரவு

கடந்த 28.11.2022ம் தேதி I.A.1/2022ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவாணையை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 13 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. 1ம் எதிர்மனுதாரரின் மகனான வைத்தியநாதன் என்பவரை 2ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்த இ.ம.எண் 1/2022

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.11.09 17:49:54 +0530

எதிருரைக்காக 28.10.2022ம் தேதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் ஒருதலைபட்சமாக மனு அனுமதிக்கப்பட்டது. மனுதாரருக்கு ஏற்பட்ட வைரஸ் காய்ச்சல் காரணமாகத்தான் உரிய நேரத்தில் எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவாணையை ரத்து செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

__2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :__

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. இ.ம.எண் 1/2022ல் எதிருரை தாக்கல் செய்வதற்காக இம்மனுதாரருக்கு பலமுறை வாய்ப்பு வழங்கியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை. அதன்பிறகு இ.ம.எண் 1/2022 அனுமதிக்கப்பட்டு 75 நாட்கள் கழித்து பொய்யான விபரங்களுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து 2ம் எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கில் விசாரணை தொடங்கி நடக்க உள்ள நிலையில் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்குடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

**4. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

5. தாவா வழக்கானது விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்கக்கோரி 2ம் எதிர்மனுதாரரால் இ.ம.எண் 1/2022 என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவில் வழக்கு வாதியால் எதிருரை தாக்கல் செய்யப்படாத காரணத்தால் 28.11.2022ம் தேதி அம்மனு ஒருதலைபட்சமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒருதலைபட்சமாக ஏற்பட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 28.11.2022ம் தேதியில் இம்மனுதாரருக்கு கடுமையான வைரஸ்

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2023.11.09 17:50:01 +0530

காய்ச்சல் ஏற்பட்ட காரணத்தால் வழக்கறிஞரை சந்தித்து எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதன் காரணமாகவே ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டதாகவும், மனுதாரரின் செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. உரிய காலத்தில் ஏன் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதற்கு மனுதாரர் கூறியுள்ள காரணம் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்படியே உள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதை பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2023ம் வருடம் நவம்பர் மாதம் 9ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.11.09 17:50:07 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.11.09 17:50:16 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.11.09 17:50:20 +0530